## விடியல் வரும்!

வீழாப் பெருங்கனவாய் வேதனைகள் எழுந்து வரும்!
தாழா நெஞ்சத்து தரித்திரராய் மனந்தானும் குறுகிவிடும்!
அழியாத மனச்சுமைகள் சுவடுகளாய் பதியம் கொள்ளும்!
விழிநீரை துடைக்காத வேதனைகள் நெஞ்சில் எழும்!
பழிசொல்லும் மொழிகூட பரந்தாமன் பெயர் சொல்லும்!
ஆழாக்கு நெல்லெடுத்து அரிசியாக்கி உலையில் இட
ஏழைக்கும் ஓர்நாள் மண்ணில் விடியல் வரும்!
வாழைக்கும் தென்னை வருந்தாது தண்ணீர் தரும்!
கோழைக்கும் வீரம் வந்து வேதனைகள் நகர்ந்து விடும்!
14-07-2020 10-30 PM (ம.கீ-பக்-12)

## வினைகள் அறிவீர்!

காலம் எழுதிய கோலம் கண்டு,
ஞாலம் சூழும் வினைகள் அறிந்து,
சீலம் இல்லா வாழ்வினை மறந்து,
மூலம் இதுவென உண்மை தேடி,
ஆலம் விழுதாய் அவனியில் நிறைந்து,
பாலம் எனவாய் உடலதைப் பேண,
வேலும் மயிலாய் வினைகள் அறிவீர்!
- கவிவளவன்

23.10 Hrs. 24-07-2016

(கு.பா-பக்-15)

## இறைமடி தேடுக! 23-05-2020. (ம.கீ-பக்-13)

மாண்டவர் வாழ்வும் மறைந்தவர் சூதும் போயின! போயின!
தாழ்ந்தவர் வலியும் தேர்ந்தவர் மகிழ்வும் போயின! போயின!
வளமும் கலனும் வளர்ந்த சூழ்ச்சியும் போயின! போயின!
உறவும் மகிழ்வும் உற்ற பொருளும் போயின! போயின!
பாடுக! மனமே பாடுக!! பரந்தாமன் மெய்ப்புகழைப் பாடுக!!
வாடாத மனத்தோடு நாளும் வையத்தில், வாழ்ந்து,
இறைமடியைத் தேடுக! தேடுக! நாளும் தேடுக!!

## மனம்!

நட்பெனும் பாலம் மனதுள்;
நலம்பட கூறும் கதைகள்!
முட்புதர் நிறைந்த வழியில்,
முகமண் கூறி நிற்கும்;
கட்சுவை போலும் களிக்கும்,
நல்லுறவையும் காட்டும்!
மட்டிலா மகிழ்வின் தோழன்,
மனத்தின் சூழும் மாட்சி!

**07-08-2016** (கு.பா-பக்-16)

## கலக்கம் நீக்கிடு!

எண்ணமே அறிவின் செயலகமாம்!
திண்ணமாய் எண்ணிடில் பயன்தருமாம்!
வண்ணமாய் அறிவைச் சீர்திருத்த,
கண்ணியமாகச் சிந்தை வரவேண்டும்!

சிந்தையை நல்வழி செலுத்திடவே,
பந்தமில் நிலையைத் தொடவேண்டும்!
தந்திரமிக்கார் தனிவழியைத் தகர்த்தே
மந்திரம்போலே மனம் திருத்தி எழு!

-வேறு-

உலகம் யாவும் உன்வசமே!
ஒவ்வொரு பொருளும் உன்னிடமே!
கலகம் இல்லா மனம் காண்பாய்,
காரியம் யாவினும் வெற்றியுண்டு!
இலகுவாய் சொற்களைச் செரித்துவிடு!
இமயம் கூட உன் கையில் வரும்!
பலவகைச் சிக்கலில் மனிதமனம்!
பாருக்கு நீயே ஒளியாவாய்!

கவிஞர் கவிவளவன்

13-02-2020 (13.13 Hrs.)

(விழு.வே-பக்-19)

## காதல் வேண்டும்! காதல் வேண்டும்!!

அன்னையின் காதல் அன்பைச் சொல்லும்!
தந்தையின் காதல் அறிவைச் செய்யும்!
தமையனின் காதல் வழியைக் காட்டும்!
தம்பியின் காதல் தோளை உயர்த்தும்!

தமக்கையின் காதல் பரிவைக் காட்டும்!
தங்கையின் காதல் அழகைச் சொல்லும்!
ஆசான் காதல் இயன்நிலைப் பகரும்!
நண்பனின் காதல் காலத்தை உணர்த்தும்!

மனைவியின் காதல் வாழ்வியல் கூறும்!
மக்களின் காதல் தெம்பை அளிக்கும்!
மகனின் காதல் அகத்தை நிரப்பும்!
மகளின் காதல் அன்னையைக் காட்டும்!

காதல் வேண்டும்! காதல் வேண்டும்!
மானுடம் உய்ய காதல் வேண்டும்!

- கு.ப. அசோகன் 14-02-2021

(விழு.வே-பக்-11)

## எங்கள் சாமி!

மலைமுகட்டில் கதிரெழவே,
சேயோன் என்றவனை
செவ்வேளாய் தினம் துதித்தான்!
இருள் நிறைந்த காடகத்தில்,
எழுகின்ற எழிலுருவை
மாயோனாய் மனம் கொண்டான்!
இருநிலமும் திரிந்தக்கால்,
எழுகின்ற நிலையதனில்,
கொற்றவையாய் கும்பிட்டான்!
அறிவாலே மனம் தேடி
ஆண்டவனை தானுணர்து,
லிங்க வடிவாக்கி நெறி செய்து,
மனம் கண்டான்.
பாட்டன் முப்பாட்டன்
பார்மிசை நிறைந்தார் சொல்
குல தெய்வ வழியாக,
கருப்பன் ஐயனாரை
காக்கும் கடவுளென்பான்.
தொடக்கமாய் முறை செய்ய
பிடித்து வைப்பான் பிள்ளையாரை!
கந்தன் வழியுண்டு,
கண்ணன் வழியுண்டு!
பந்தமில் அறிவிலே
ஈசன் நிலையுண்டு!
செல்வத்தைத் திருமகளாய்
செப்பிய நிலையுண்டு!
அல்லால் கணவன் மனைவி யென்ற,
கதைகள் தமிழர்க்கில்லை!
10-03-2021 (விழு.வே-பக்-17)

## பாரதிதாசன்

தமிழே தமிழென்று,
தமிழாய்த்தமிழென்று;
தமிழ்மன்றம் தாம்செய்து,
தமிழர்தம் வாழ்வியலின்
தன்மைகள் சொன்னமகன்!
சின்னச்சாமி பாரதியின்
சீடனாய் நிறைந்திருந்து,
கன்னித்தமிழ் பெருமைகளை
மண்ணில் யாவருக்கும்
கனிவுடனே சொன்னகவி
பாவேந்தன் தனைப்
போற்றுவோமே!
**- கவிவளவன்** 29-04-2021 (கு.பா-பக்-17)

## தொல்லையாம் தமிழே!

தொல்லையாம் தமிழேயென்று;
தோய்ந்துநான் சொன்னபோதும்,
எல்லையாம் கல்விதன்னில்;
இயன்மொழி வேண்டுமென்றார்!

வல்லமை கொண்டோர் தமிழை
வாழ்க என்றுரைப்பார்!
இல்லத்தில் பேசும்போதும்
இயன்நிலைக் காண்பேனில்லை!
நல்லன வேண்டுமென்றே,
ஆங்கில வழியை யடைந்தால்,
தொல்லையாய்த் தமிழும் என்னைத்
தொடர்வது நாளும் ஏனோ?

அல்லன என்றே சொல்லும்
எதிர்மறை இல்லா தமிழாம்!
வில்லனாய் என்றன் முன்னே
வெறுப்பேற்றி நிற்குதையோ!

வல்லமை தமிழின், வானுயர் நிலை;
சொல்லும் தாத்தா உண்டு!
எல்லையில் நிற்கும் என்றன்
இயன்நிலை பரிதாபம் அன்றோ!

வல்லமை தருவாய் நீயே!
வான்புகழ் அறிவின் சுடரே!
தொல்லையாம் தமிழும் என்னைத்
தொடர்ந்திட வேண்டா மன்றோ!
28-02-2021
The mind voice of Master HRISHIKESH

## வாழ்த்து!

தெள்ளிய தமிழைப் போலே
தீஞ்சுவை அறிவினோடு,
பள்ளியின் காலம் மறந்து,
பார்புகழ் சீலம் கொள்ள,
அள்ளிய கனவின் கீர்த்தி,
அணைந்திட மனதைச் செலுத்தி,
துள்ளுமோர் மானின் மாட்சி
துணை கொண்டு என்றும் வாழி!
01.01.2014 (4.40.pm)

(கு.பா-பக்-18)